# அனகாபுத்தூர் நகராட்சி

**சென்னை – 600 070.**

கூட்ட எண்.57/2020 நாள். 31.03.2020

## தனி அலுவலர் அவர்களின் மார்ச் 2020 மாதம் சாதாரணக் கூட்டப்பொருள்

**31.3.2020ம்** நாள் வெள்ளிகிழமை மாலை **4.30** மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் சாதாரணக் கூட்டப் பொருள் .

**பொருள் எண். 1**

அனகாபுத்தூர் நகராட்சி மார்ச் 2020 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு / இறப்பு / மற்றும் இறந்து பிறந்தவைகள் குறித்த விவரம்

**பிறப்பு / இறப்பு / இறந்து பிறந்தவைகள்**

| வ. எண். | மாதம் | பிறப்பு | | இறப்பு | | இறந்து பிறந்தவைகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1. | மார்ச் 2020 | 0 | 0 | 4 | 11 | இல்லை | இல்லை |

**பொருள் எண். 2**

ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் மார்ச் 2020 மாதத்தின் நாட் குறிப்புகள்

**அலுவலக குறிப்பு :** கூட்டத்தில் பதிவு செய்யலாம்.

**பொருள் எண். 3**

2019– **2020ம் ஆண்டுக்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடு மற்றும்** 2020 – **2021ம் ஆண்டின் உத்தேச வரவு செலவு** மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் ஒப்தல் வழங்கலாம்

**பொருள் எண். 4**

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதிய குடிநீர் இணைப்பு வழங்க குடிநீர் இணைப்பு வைப்பு தொகை, மேற்பார்வை கட்டணம் வசூலிக்கப்படுகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–05 அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.748/2008/கு.வ2 நாள்.21.09.2009–ல் வ.எண்.2(ஈ) நகர்பற உள்ளாட்சி அமைப்புகள் கண்டிப்பாக பின்பற்ற அறிவுறுத்தப்பட்டு, அதனடிப்படையில் மேற்படி கட்டணம் மதிப்பிடப்பட்டு மன்ற அனுமதி பெறப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு வருடமும் நகராட்சிக்குச் செலுத்த வேண்டிய மேற்படி சாலை துண்டிப்பு கட்டணத்தை முந்தைய ஆண்டின் தொகையை விட 5 % சதவீதம் உயர்த்தப்பட வேண்டும் (ஏப்ரல் 1ம் தேதி முதல்) என

அறிவுரை வழங்கப்பட்டுள்ளதால் 2020—21ம் நிதியாண்டிற்கு மேற்படி குழாய் இணைப்பு வழங்கப்படும் வீட்டு உரிமையாளர்களிடமிருந்து உயர்த்தப்பட்ட கட்டணம் வசூலிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வருடம் | தார் சாலை | | சிமெண்ட் சாலை | | WBM சாலை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 0 – 30 மீ ரூ. | 30 – 90 மீ ரூ. | 0 – 30 மீ ரூ. | 30 – 90 மீ ரூ. | 0 – 30 மீ ரூ. | 30 – 90 மீ ரூ. |
| 1 | 2019—20 | 2,363/— | 2,993/— | 2,730/— | 3,360/— | 1,103/— | 1,733/— |
| 2 | 2020—21 | 2,481/— | 3,143/— | 2,867/— | 3,528/— | 1,158/— | 1,820/— |

**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண். 5**

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட அனகாபுத்தூர் கிராமம் சர்வே எண்: 260/1A1A2& 2A ல் உள்ள இடத்தை வீட்டு மனைகளாக உட்பிரிவு செய்ய அனுமதி வழங்கக் கோரி மனுதாரர் திருமதி. பேபி பச்சையப்பன் என்பவர் சென்னை பெரு நகர் வளர்ச்சி குழுமத்தில் விண்ணப்பம் சமர்பித்துள்ளார். இவ்விண்ணப்பத்தை பரிசீலனை செய்த பின் உத்தேச மனை உட்பிரிவில் அமைய உள்ள சாலை பகுதியை அரசாணை எண். 654, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள். 21.08.1984 ன் படி உள்ளாட்சிக்கு பதிவு செய்யப்பட்ட தான பத்திரம் மூலம் ஒப்படை செய்யபட வேண்டும் என்பதால், வரைபடத்தில் கண்டுள்ள சாலை பகுதியை நகராட்சிக்கு தானமாக எடுத்து, பதிவு செய்யப்பட்ட தான பத்திரத்தை நகராட்சி ஆணையர் அவர்களின் ஒப்பம் பெற்று அனுப்பி வைக்க சென்னை பெரு நகர் வளர்ச்சி குழுமம் 20.02.2020 ம் தேதிய கடிதம் எண். L1/10460/2019 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து உத்தேச மனை உட்பிரிவு செய்யப்பட உள்ள இடம் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி உத்தேசிக்கப்பட்டுள்ள இடம் அனகாபுத்தூர் கிராமம் சர்வே எண். 260/1A1A2 & 2A ல் அமைந்துள்ளது. வருவாய் ஆவணங்களின்படி இடமானது திரு. பச்சை பிள்ளை அவர்களின் மனைவி திருமதி. பேபி அம்மாள் பெயரில் பதிவாகியுள்ளது. (பட்டா எண்.9038 மற்றும் 4664 ) இடத்தின் விஸ்திரணம் 1012 சதுர மீட்டர் ஆகும். இதில் சாலை பகுதி மட்டும் 163 சதுரமீட்டர் உள்ளது. சாலை பகுதிக்கான அபிவிருத்தி கட்டணம் ரூ. 1,25,000/— ஆகும் என நகராட்சி பொறியாளரின் 11.03.2020 ம் தேதிய குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. மேற்படி அபிவிருத்தி கட்டணத்தை செலுத்த கோரி மனுதாரர் திருமதி. பேபி பச்சைபிள்ளை அவர்களுக்கு 12.03.2020 ல் அறிவிப்பு அனுப்பப்பட்டதை தொடர்ந்து மனுதாரரும் மேற்படி கட்டணத்தை நகராட்சி கருவூலத்தில் 13.03.2020 ம் தேரிய ரசீது எண் : 017/01/3/19—20/0014247 ல் ரூ.1,25,000/— ஐ செலுத்தியுள்ளார்.

எனவே மன்றத்தின் ஒப்புதல் பெற்ற பின்பு, வரைபடத்தில் கண்டுள்ள சாலை பகுதியை பதிவு செய்யப்பட்ட தான பத்திரம் மூலம் நகராட்சி பெயருக்கு தானமாக பெற்று உறுப்பினர் செயலர், சென்னை பெரு நகர் வளர்ச்சி குழுமத்தின் நடவடிக்கைக்காக அனுப்பலாம்.

**அலுவலக குறிப்பு:** அனகாபுத்தூர் கிராமம் சர்வே எண். 260/1A1A2 & 2A ல், சென்னை பெரு நகர் வளர்ச்சி குழுமத்தின் 20.02.2020ம் தேதிய கடிதம் எண்:L1/10460/2019 உடன் இணைந்து வரப்பெற்றுள்ள வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள சாலை பகுதிக்கான அபிவிருத்தி கட்டணம் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளதால் மேற்படி சாலை பகுதியை நகராட்சி பெயருக்கு பதிவு செய்யப்பட்ட தானபத்திரம் மூலம் எடுத்துக்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண். 6**

அனகாபுத்தூர் நகராட்சி பகுதிகளில் கொசு ஒழுப்பு மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பினை தொடர்ந்து தீவிரப்படுத்துவதற்காக பொது சுகாதாரப் பிரிவில் உள்ள பெரிய (50 லிட்டடர்) புகை போக்கி இயந்திரத்தினை இயக்க நகராட்சியில் TATA ACE ஆட்டோ வாகனம் இல்லாததால், வாடகை அடிப்படையில் TATA ACE வாகனம் விநியோகம் செய்யும் பணிக்காக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரர் மெசஸ் தி வாலாஜா இன்ஜினியரிங் கோ ஆட்ரேட்டிங் சென்டர் லிட் நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணிக்கான பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேலும் பணிக்கான ஆண்டு ஒப்பந்த காலம் 31.03.2020 முடிவடைந்தவிட்டது. மேற்படி பணியினை தொடர இந்தியா முழுவதும் கொரோனா வைரஸ் காய்ச்சல் குறித்து 144 ஊரடங்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் பணியினை மேற்கொள்ள போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தால் ஒப்பத்நபுள்ளி கோர இயலவில்லை. எனவே கடந்த ஆண்டு விலை விகிதத்தில் அதே ஒப்பந்த அடிப்படையில் அதேர ஒப்பந்ததாரர் மூலம் மேற்படி பணியினை தொடர ஆறு மாத கால நீடிப்பு செய்யவும் இதற்கான செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பொது சுகாதார பணியை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண். 7**

இந்நகராட்சியில் 2020–21ம் அலுவலர் மற்றும் பணியாளர்கள் மருத்துவ செலவினம் மேற்கொண்டமைக்கு, 21.04.2019 அல்லது அதற்கு முன்னர் அரசு பணியில் சேர்ந்த பணியாளர்களுக்கு மற்றும் மருத்துவ படிகள் பெறாதவர்களுக்கும் மருத்துவ செலவு மீள வழங்க தகுதியுடையவர்களாகவும் , வருடாந்திர உச்சவரம்பு மருத்துவ செலவினங்களில் குறைந்தபட்ச வரம்பு 15 சதவிகிதம் வழங்க அரசாணை எண் 306 நிதி (படிகள் ) துறை நாள். 13.10.2017ன்படி மேற்கண்ட பணியாளருக்கு மருத்துவ செலவினம் வழங்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ.100000/-த்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண். 8**

05.03.2020ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கல்மடுவு, அன்னை பிளாட்ஸ் அருகில் உள்ள வாம்பே நவீன கழிப்பிடம் (Toilet) அபிவிருத்தி செய்யும் பணி | 2.50 | ஜி.சுரேஷ்<br>எம்.நித்தியானந்தம் | 0.10% குறைவு<br>1.20% அதிகம் |

**அலுவலக குறிப்பு:** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண். 9**

அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019ல் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 வெளியிடப்பட்டது. மேற்கண்ட புதிய விதிகளின்படி அனகாபுத்தூர் நகராட்சியில் 01.04.2019 முதல் கட்டிட / மனை உட்பிரிவு மற்றும் மற்றும் மனைப்பிரிவுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் வெளியிடப்பட்ட கட்டிட விதிகளில் திருத்தங்கள் செய்து அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 31.01.2020ல் அரசாணை வெளியிடப்பட்டது. வெளியிடப்பட்டுள்ள அரசாணையை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கலாம்.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(ந.க.எண்.293/2019/எப்1)**

**பொருள் எண்.10**

இந்நகராட்சியில் உள்ள பொது பிரிவு, வருவாய் பிரிவு, பொறியியல் பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவு ஆகிய பிரிவுகளில் உள்ள கணிணிகளுக்கு புதியதாக ஆண்டி வைரஸ் மென்பொருள் பொருத்தி பராமரிப்பு பணி இரண்டு ஆண்டிற்கு மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.2,00,000/-க்கு பொது நிதியில் மேற்கொள்ளவும், மேற்படி பணியினை ஒப்பந்தபுள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:** கணிணிகளுக்கு புதியதாக ஆண்டி வைரஸ் மென்பொருள் பொருத்தும் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.293/2019/எப்1)

**<u>பொருள் எண்.11</u>**

அனகாபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள தெருவிளக்குகள் பராமரிப்பில் கீழ்காணும் வகையில் மொத்தம் 2129 எண்ணம் கொண்ட தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றது

List of Street Lights under Maintenance.

| Sl.No. | Item Description | No. of Lights |
|---|---|---|
| 1 | 40W Tube Lights Fitting | 681 |
| 2 | 3x36 W CFL fittings | 882 |
| 3 | 250W SV Lamp Fititings | 393 |
| 4 | 70 Watts LED Fitting | 94 |
| 5 | 100Watts LED Fitting | 51 |
| 6 | 4x24 W T5 Fittings | 28 |
| | Total | **2129** |

இந்நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணியினை மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாததால், (ஒரே ஒரு மின் பணி உதவியாளர் உள்ளார்) தனியார் மூலம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் கடிதத்தில் அனுமதி அளிக்கப்பட்டதின் அடிப்படையில் தெருவிளக்கு பராமரிப்பு பணி தனியார் மூலம் 2017-18 முதல் 2019–20 வரையிலான காலத்திற்கு மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இந்த ஒப்பந்த காலம் 31.05.2020ம் தேதியுடன் முடிவடைகிறது. தலைமை பொறியாளர் அவர்களின் கடித ந.க.எண்.13899/2016/DO1 நாள் 24.03.2017ன்படி மூன்றாண்டுகளுக்கு மேல் ஒப்பந்தத்தினை நீட்டிக்க வழிவகை இல்லை. தற்போது இந்நகராட்சியில் தெருவிளகு மற்றும் இதர விளக்குளை பராமரிப்பின் கீழ் மொத்தம் 2129 எண்ணிக்கை பராமரிப்பில் உள்ளது. எனவே 2020–21ம் நிதியாண்டிற்கு தனியார் மூலம் தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் மற்றும் அதற்கான தோரா செலவினத் தொகை ரூ.44.03 இலட்சம் மதிப்பீட்டில் புதிய ஒப்பந்தபுள்ளிகள் கோருவதற்கும் இந்கரமன்ற தீர்மான எண்.654 நாள் 28.2.2020ல் அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது 22.3.2020 கொரானா நோய் (கோவிட் - 19) தொற்று பரவாமல் இருப்பதற்காக மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி தமிழக அரசால் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, தற்போது அமலில் உள்ளது. இதன் காரணத்தால், மேற்படி பணிக்கான நிர்வாக அனுமதி பெற இயலாத நிலை உள்ளது. தொடர்ந்து அத்தியவாசிய பணியான தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட வேண்டிய காரணத்தினால், தெருவிளக்கு பராமரிப்பு பயின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு 01.06.2020 முதல் 31.11.2020 வரையிலான 6 மாத காலத்திற்கு தற்போது பராமரிப்பு பணி

மேற்கொள்ளபட்டு வரும் ஒப்பத்நதார. M/s லட்சுமி எண்டர்பிரைசஸ் மூலம் ஏற்கனவே வழங்கிய ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின் அடிப்படையில் பணினை மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினத் தொகை ரூ.16.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. தெருவிளக்கு பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்கண்ட பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்லாம்.

2. பணிக்கான செலவினத் தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்.12</u>**

இந்நகராட்சி 18 வார்டு பகுதிகளில் கொசுப்புழு ஒழிப்பு மற்றும் டெங்கு தடுப்பு பணிகளுக்கான Dengue Breeding checkers என்ற கொசு ஒழிப்பு பணியாளர்கள் 50 நபர்கள் பேன்சி ஏஜென்சி நிறுவனத்தின் மூலம் சப்ளை செய்யப்பட்டு வந்தது. தற்போது உலகமே அச்சுறுத்தும் கொரோனா வைரஸ் பணிக்காக அரசு தலைமை செயலர், கூடுதல் தலைமை செயலர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்திரவின்படியும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் வழிகாட்டுதல் கூட்டங்களில் தெரிவித்துள்ளபடி கொரோனா வைரஸ் காய்ச்சல் நோய் வெளிநாட்லிருந்து வரும் நபர்கள் மூலம் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி பொதுமக்களுக்கு கொரோனா நோய் தொற்று ( n COVID-19) வைரஸ் காய்ச்சல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல், வீடுதோறும் விழிப்புணுர்வு ஸ்டிக்கர் ஒட்டுதல், துண்டு பிரசுரம் வழங்குதல் கொசு ஒழிப்பு களப்பணியாளர்களை கொரோனா நோய் தொற்று ( n COVID-19) வைரஸ் காய்ச்சால் பணிக்காக தொடர்ந்து பயன்படுத்தி கொள்ள அறிவுறுத்தப்பட்டது. மேற்படி அறிவுறுத்தலின்படி கொரோனா நோய்தொற்று ( n COVID-19) வைரஸ் காய்ச்சல் பணிக்காக மார்ச் மற்றும் ஏப்ரல் 2020 வரை மறு ஒப்பந்தபுள்ளி கோரும் வரை ஏற்படும் தோராய செலவின தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்.13</u>**

அனகாபுத்தூர் நகராட்சியில் உள்ள 18 வார்டுகளில் உலகயே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கிய சீனா, இத்தாலி, ஜெர்மனி, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வேகமாக பரவிவரும் கொரோனா வைரஸ் காய்ச்சல் நோய் வெளிநாட்டிலிருந்து வரும் நபர்கள் மூலம் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி பொதுமக்களுக்கு கொரோனா நோய்தொற்று ( n COVID-2019) வைரஸ் காய்ச்சல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல் வீடுதோறும் விழிப்புணர்வு ஸ்டிக்கர் ஒட்டுதல், துண்டு பிரசுரம் வழங்குதல் , நகரின் முக்கிய இடங்களில் நிரந்திர விழிப்புணர்வு பேனர்கள் வைத்தல், பணியாளர்களுக்கு பாதுகாப்பு

உபகரணங்கள் கையுறை, முகவுறை, கம்பூட், முழு உடை கவசம், ஒளிரும் ஜாக்கட்டுகள் வாங்குதல், கிருமி நாசினி லைசால் தெளிக்கும் , கை கழுவுதிரவம், கை சுத்தம் செய்யும் திரவம், பணியாளர்களுக்கு அடையாள அட்டை மற்றும் தொற்று நோய் பரவாமல் தடுக்க தேவையான உபகரணங்கள் வாங்கி உபயோகித்த வண்ணம் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பணியை மேற்கொள்ளப்பட்டு அதற்கான செலவு தொகை ரூ.9.90 இலட்சம் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பணியை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.414 / 2020 / எச்1)

தனி அலுவலர்
அனகாபுத்தூர் நகராட்சி